

# SIVAPURANAM
## MISSION

www.Sivapuranam.in

திருச்சிற்றம்பலம்

# 5. திருச்சதகம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

பத்தி வைராக்கிய விசித்திரம்

(4) ஆத்தும சுத்தி

(அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)



# திருச்சிற்றம்பலம்



ஆடு கின்றிலை கூத்துஉடையான் கழற்கு
அன்பிலை என்புஉருகிப்
பாடு கின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின்றதும்இலை
துணைஇலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோறு அலறிலை
செய்வதுஒன்று அறியேனே




அறிவு இலாத எனைப்புகுந்து ஆண்டு
கொண்டு அறிவதை அருளிமேல்
நெறிஎலாம் புலம் ஆக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானைப்

பிறிவு இலாத இன்அருள்கள் பெற்றிருந்தும்
மாறாடுதி பிணநெஞ்சே
கிறிஎலாம் மிகக் கீழ்ப்படுத்தாய் கெடுத்தாய் 32
என்னைக் கெடுமாறே.




மாறி நின்று எனைக்கெடக் கிடந்தனையை
எம்மதிஇலி மடநெஞ்சே
தேறு கின்றிலம் இனிஉனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்
நீறு நின்றது கண்டனை ஆயினும்
நெக்கிலை இக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுஉன் பரிசுஇது
கேட்கவுங் கில்லேனே. 33





கிற்றவா மனமே கெடுவாய் உடையான்
அடி நாயேனை
விற்று எலாம்மிக ஆள்வதற்கு உரியவன்
விரைமலர்த் திருப்பாதம்
முற்றிலா இளந்தளிர் பிரிந்திருந்துநீ
உண்டன எல்லாமுன்
அற்றவாறும் நின்அறிவும் நின்பெருமையும்
அளவறுக் கில்லேனே. 34





அளவு அறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு
அடியவர்க்கு எளியான்நம்
களவு அறுத்துநின்று ஆண்டமை கருத்தினுள்
கசிந்து உணர்ந்திருந்தேயும்
உளகு அறுத்து உனைநினைந்து உளம் பெருங்களன்
செய்ததும் இலைநெஞ்சே
பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை
பரகதி புகுவானே. 35





புகுவது ஆவதும் போதரவு இல்லதும்
பொன்னகர் புகப்போதற்கு
உகுவது ஆவதும் எந்தை எம்பிரான்என்னை
ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவது ஆவதும் நித்தலும் அமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவது ஆவதும் இன்றுஎனின் மற்றுஇதற்கு
என்செய்கேன் வினையேனே.





வினைஎன் போல்உடையார் பிறராருடையான்
அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற்று அதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந்திருந்துநான்
முட்டிலேன் தலைகீறேன்
இனையன் பாவனை இரும்பு கல்மனஞ்செவி 37
இன்னதென்று அறியேனே.





ஏனை யாவரும் எய்திடல் உற்றுமற்று
இன்னது என்று அறியாத
தேனை ஆன்நெயைக் கரும்பின் இன்தேறலைச்
சிவனைஎன் சிவலோகக்
கோனை மான்அன நோக்கிதன் கூறனைக்
குறுகிலேன் நெடுங்காலம்ப் கறைஇ
ஊனை யான்இருந்து ஓம்புகின்றேன்
கெடுவேன்உயிர் ஓயாதே. 38





ஒய்வு இலாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் தாள்தந்து
நாயில் ஆகிய குலத்தினுங் கடைப்படும்
என்னை நன்னெறி காட்டித்
தாயில் ஆகிய இன்அருள் புரிந்தஎன்
தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே. 39





வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடும்
அதுதனை நினையாதே
மான் நிலாவிய நோக்கியர் படிறுஇடை
மத்துஇடு தயிராகித்
தேன் நிலாவிய திருவருள் புரிந்தஎன்
சிவன்நகர் புகப்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டினும்
உண்டுஉடுத்து இருந்தேனே. 40



ஸ்ரீ மாணிக்கவாசகர்